**பத்தாம் வகுப்பு மாதிரி வினாத்தாள் (2021 - 2022)**

**X STD SAMPLE QUESTION PAPER (2021 -2022)**

**தமிழ் (006) பருவம்:2 ( TAMIL, TERM-2 )**

**காலஅளவு :2 மணி** **மொத்த மதிப்பெண்கள் : 40**

**Time allowed : 2 Hrs** **Maximummarks:40**

I. **பின்வரும் இலக்கண வினாக்களில் எவையேனும் நான்கனுக்குக் குறுகிய விடை எழுதுக.** **4x2=8**

1. வினா எதிர் வினாதல் விடை என்பது என்ன ?
2. **திணைவழுவமைதி என்றால் என்ன?**
3. **வினா எத்தனை வகைப்படும்?அவை யாவை ?**
4. **ஆற்றுநீர்ப் பொருள்கோள்- விளக்கம்தருக.**
5. **அகத்திணை என்றால் என்ன? எத்தனைவகைப்படும்?**
6. **சிறுபொழுது என்றால் என்ன? விளக்கம்தருக.**
7. **குறிஞ்சித் திணைக்குரிய கருப்பொருள்களுள் நான்கினை எழுதுக.**

II. **பின்வரும் செய்யுள் வினாக்களில் எவையேனும் மூன்றனுக்குச் சுருக்கமான விடை எழுதுக.** **3x3=9**

8. **குலசேகராழ்வார் திருவித்துவக்கோட்டு அம்மானிடம் வேண்டுவது யாது?**
9. **உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எனப் பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக**
10. **இடைக்காடனார் இறைவனிடம் எவ்வாறு முறையிட்டார் என்பதை விளக்குக.**
11. **முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடியநயத்தை விளக்குக**
12. **அமைச்சர்களுக்கு உரிய பண்புகளாகக் குறள் குறிப்பன யாவை?**

III. **பின்வரும் உரைநடை வினாக்களில் எவையேனும் இரண்டனுக்குக் குறுகிய விடை எழுதுக.** **2x2=4**

13. **செயற்கை நுண்ணறிவு என்றால் என்ன?**
14. **.தெருக்கூத்து பற்றி விளக்குக**

15. கரகாட்டம் பற்றிக் குறிப்பு வரைக.
16. மொழிபெயர்ப்பு ஏன் தேவைப்படுகிறது.?

IV. பின்வரும் உரைநடை வினாக்களில் ஏதேனும் ஒன்றனுக்கு விரிவான விடை எழுதுக. 1x5=5

17. மொழிபெயர்ப்பின் செம்மை குறித்துவிவரி.
18. எதிர் காலத்தில் ரோபோவின் பங்களிப்பு எவ்வாறு இருக்கும் என்று விவரி

V. பின்வரும் துணைப்பாடப் பொருண்மைகளுள் ஒன்று குறித்து விரிவாக எழுதுக. 1x5=5

19. தன்னம்பிக்கை மனிதர் ஸ்டீபன் ஹாக்கிங்
20. பாய்ச்சல்-கதைச்சுருக்கம்
21. புதிய நம்பிக்கை விதைக்கும் நம்பிக்கை.

VI. 22.பின்வரும் உரைநடைப் பகுதியை மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி வரைக. (4)

1876,1877,1878 ஆகிய ஆண்டுகளில் தென்னிந்தியப் பகுதியில் ஏற்பட்ட மிகக்கொடிய பஞ்சத்தைத் தாது வருடப் பஞ்சம் என்று, இன்றும் நினைவு கூர்வர். ஒரு கோடி மக்கள் பஞ்சத்தின் பிடியில் சிக்கி இறந்திருக்கலாம் எனப் பதிவுகள் கூறுகின்றன. இதைக் கண்டு மனம் பொறுக்காத தமிழர் ஒருவர் மனமுவந்து தமது சொத்துகள் அனைத்தையும் கொடையளித்தார். இதனைப் போற்றும் விதமாகக் கோபாலகிருஷ்ண பாரதியார், 'நீயே புருஷ மேரு...' என்ற பாடலை இயற்றி அவரைப் பெருமைப்படுத்தினார். அவர்தான், நீதிபதி மாயூரம் வேதநாயகம். அவர், மொழிபெயர்ப்பாளராகவும் நாவலாசிரியராகவும் பெயர் பெற்றவர்; தமிழின் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரத்தை இயற்றியவர். மாயவரத்தின் நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றிய அவர், தமது சமகாலத் தமிழறிஞர்களான மகாவித்வான் மீனாட்சி சுந்தரனார், இராமலிங்க வள்ளலார் முதலான தமிழறிஞர்களிடம் நட்பு பாராட்டினார் . 1826 முதல் 1889 வரை வாழ்ந்த மாயூரம் வேதநாயகம் கி.பி. 1805 முதல் கி.பி. 1861ஆம் ஆண்டுவரை ஆங்கிலத்தில் இருந்த நீதிமன்றத் தீர்ப்புகளை முதன்முதலில் தமிழில் மொழிபெயர்த்து 'சித்தாந்த சங்கிரகம்' என்ற நூலாக வெளியிட்டார்; மேலும் பெண்கல்விக்குக் குரல் கொடுத்த பெண்மதி மாலை என்ற நூலை வெளியிட்டார்.. இசையிலும் வீணை வாசிப்பதிலும் வல்லவராகத் திகழ்ந்த இவர்,

ஆயிரத்திற்கும் மேற்பட்ட கீர்த்தனைகளை இயற்றியிருக்கிறார்; அவர், பெண்கல்விக்குக் குரல் கொடுத்த மிக முக்கிய ஆளுமையாக அறியப்படுகிறார்.

VII. <u>பின்வரும் பொருள்களில் ஒன்றுபற்றிக் கடிதம் எழுதுக</u>. 1x5=5

23.நீ படித்து மகிழ்ந்த நூல் பற்றி உன் நண்பனுக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

[ அல்லது ]

24.உங்கள் பகுதியில் ஆவின் பால் வழங்கும் மையம் அமைத்துத் தருமாறு ஆவின் நிறுவன இயக்குநருக்குக் கடிதம் வரைக.

( இருகடிதங்களிலும் உன் முகவரி அ.நன்னன் / அ.நன்மங்கை,
268. நல்வாழ்வுத் தெரு, அண்ணாநகர்மேற்கு, சென்னை-40
எனக் கொள்க)